இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 27-11-2023

# பஞ்சாப் தீர்ப்பைப் படித்துத் திருந்தவும்!

**தமிழ்நாடு ஆளுநர் ரவி என்னவெல்லாம் சொல்லி வந்தாரோ, அவை அனைத்தும் அபத்தக் களஞ்சியம் என்பதை பஞ்சாப் மாநிலம் தொடுத்த வழக்கில் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது.**

★ ஆளுநர் என்பவர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுபவர். அவர் பெயரளவில் தான் மாநிலத்தின் தலைவராக இருக்கிறார். ஆளுநர் என்பவருக்கு அரசியல் சட்டப்படி சில அதிகாரங்கள் தரப்பட்டுள்ளன. அந்த அதிகாரங்களை வைத்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைகள் சட்டமியற்றும் வழக்கமான பணிகளை முறியடித்துவிட முடியாது.

★ அரசியல் சட்டத்தின் 200 ஆவது பிரிவின் படி ஒரு சட்ட முன்வடிவுக்கு ஒப்புதல் அளிக்காமல் இருப்பதற்கு ஆளுநருக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் கூடிய விரைவில் அந்த முடிவை எடுக்க வேண்டும். முடிவு எடுக்காமல் காலதாமதம் செய்வதோ, அதனை அப்படியே நிறுத்தி வைப்பதோ முடியாது. எந்த செயல்பாடும் இல்லாமல் சட்டமுன்வடிவை நிறுத்தி வைக்க ஆளுநருக்கு அதிகாரம் இல்லை. மறுபரிசீலனை செய்ய சட்டமன்றத்துக்கு அவர் அனுப்பி வைக்கலாம். திருத்தம் செய்தோ திருத்தம் செய்யாமலோ மீண்டும் அந்த சட்டமுன்வடிவை அரசு ஆளுநருக்கு அனுப்பி வைக்கலாம். அப்படி மீண்டும் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்படும் சட்டமுன் வடிவுக்கு ஆளுநர் ஒப்புதல் தருவதைத் தவிர வேறு வழியில்லை.

★ மாநில சட்டமன்றங்களால் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்ட சட்டமுன்வடிவுகளை 'நிறுத்தி வைக்கிறேன்' என்று சொல்வது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட சபையின் சட்டமியற்றும் செயல்பாட்டை தடுப்பது போல் அமைந்துவிடும். நாடாளுமன்ற ஜனநாயகத்தில் உண்மையான அதிகாரம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் தான் உள்ளது.

இவை அனைத்தும் பஞ்சாப் மாநில ஆளுநரின் நடத்தை தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சந்திரசூட், நீதிபதிகள் பார்திவாலா, மனோஜ் மிஸ்ரா அமர்வு கூறிய தீர்ப்பின் உள்ளடக்கம் ஆகும். இதே போன்ற ஒரு வழக்கு தான் கேரள ஆளுநருக்கு எதிராகவும் உச்சநீதிமன்றத்தில் இருக்கிறது. அப்போதும் நீதிபதிகள், " பஞ்சாப் மாநில அரசு தொடர்ந்த வழக்கின் தீர்ப்பை இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளோம். அதனை ஆளுநரின் செயலாளர் படித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்" என்று சொல்லி இருக்கிறார்கள். இதே போன்றது தான் தமிழ்நாடு ஆளுநருக்கு எதிரான வழக்கும். அதிலும் இப்படித்தான் தீர்ப்பு வரும்.

**கடந்த ஏப்ரல் மாதம் ஆளுநர் ரவி என்ன சொன்னார் தெரியுமா? 'கிடப்பில் இருந்தாலே நிராகரிக்கப்பட்டதாகவே அர்த்தம். நீண்ட நாட்களாக கிடப்பில் வைக்கப்பட்டுள்ள மசோதாக்கள் நிராகரிக்கப்பட்டதாகவே அர்த்தம். வார்த்தை அலங்காரத்துக்காக அதனை நிறுத்தி வைப்பு என்கிறோம்' என்று பேசினார். மாணவர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு அவர்கள் மத்தியில் இப்படி பேசினார்.**

**ரகசியக் காப்பு உறுதிமொழி எடுத்துள்ள ஒருவர், நிர்வாக ரீதியாக தான் எடுக்கும் நிலைப்பாடு குறித்து பொதுவெளியில் இப்படி அலட்சியமாகக் கருத்துகளை வெளிப்படுத்துவது அரசியல் சட்ட வரையறைகளை மீறிய செயல் ஆகும். அதனைத் தான் ரவி இது வரை செய்து வருகிறார். மாநிலத்தின் கவர்னராக இல்லாமல், இந்த மாநிலத்தின் மன்னராக அவர் நினைத்துக் கொள்கிறார்.**

"... The Governor, as an unelected Head of the State, is entrusted with certain constitutional powers. However, this power cannot be used to thwart the normal course of lawmaking by the State Legislatures. Consequently, if the Governor decides to withhold assent under the substantive part of Article 200, the logical course of action is to pursue the course indicated in the first provision of remitting the Bill to the state legislature for reconsideration. In other words, the power to withhold assent under the substantive part of Article 200 must be read together with the consequential course of action to be adopted by the Governor under the first proviso. If the first proviso is not read in juxtaposition to the power to withhold assent conferred by the substantive part of Article 200, the Governor as the unelected Head of State would be in a position to virtually veto the functioning of the legislative domain by a duly elected legislature by simply declaring that assent is withheld without any further recourse. Such a course of action would be contrary to fundamental principles of a constitutional democracy based on a Parliamentary pattern of governance. Therefore, when the Governor decides to withhold assent under the substantive part of Article 200, the course of action which is to be followed is that which is indicated in the first proviso. The Governor is under Article 168 a part of the legislature and is bound by the constitutional regime" என்று தெளிவாகச் சொல்லப்பட்டு விட்டது அந்தத் தீர்ப்பில். பக்கம் 16. வரிசை எண் 25.

**'கிடப்பில் போடவும் கூடாது, நிறுத்தி வைக்கவும் கூடாது, அதற்கான எந்த உரிமையும் தகுதியும் ஆளுநர்களுக்குக் கிடையாது' என்று சொல்லி இருக்கிறது உச்சநீதிமன்றம். தேவையில்லாத சக்கைகளைப் படிப்பதை நிறுத்திவிட்டு, இதைப் படிக்கட்டும் ஆளுநர். திருந்தட்டும் ஆளுநர்.**

## சென்னையில் நேற்றிரவு கனமழை!

சென்னை,நவ.27-

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, ராணிப்பேட்டை வேலூர், தருமபுரி, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகை, திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை உள்ளிட்ட 22 மாவட்டங்களில் அடுத்த மூன்று மணி நேரத்திற்குள் மிதமானது முதல் கனமழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

இந்நிலையில், கடந்த சில நாட்களாகவே பல்வேறு இடங்களிலும் நல்ல மழை பெய்து வருகிற நிலையில், இந்த மழை தொடரும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னையை பொறுத்த வரை அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (26.11.2023) சென்னையில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள் – ஊரகவளர்ச்சித் துறை அமைச்சர். இ. பெரியசாமி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ. ராசா, அந்தியூர் செல்வராஜ், கனிமொழி கருணாநிதி, கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ஏறத்தாழ 5 லட்சம் இளைஞர்கள் பங்கேற்கும்

# சேலம் - இளைஞர் அணி மாநாட்டை எழுச்சியோடு நடத்துவோம்!

## கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

சென்னை, நவ. 27-

கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நேற்று காலை (26.11.2023) நடைபெற்று முடிந்து, கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என். நேரு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

கலைஞர் அரங்கம் புதுப்பிக்கப்படுவதால் கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் இந்த ஹோட்டலில் நடைபெற்றது. இரண்டு முக்கியமான முன்னெடுப்புகளுக்காக இந்தக் கூட்டத்தைத் தலைவர் அவர்கள் கூட்டியிருந்தார்கள்.

நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான பணிகளை ஆறு மாதங்களுக்கு முன்பே தி.மு.க. சார்பில் தொடங்கி விட்டோம் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். தமிழ்நாடு முழுவதும் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்களுக்கு மண்டல வாரியாகப் பயிற்சி பாசறைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஐந்து மண்டலங்களில் மிகப்பெரிய மாநாடுகளைப் போல இக்கூட்டங்களை நடத்தி முடித்திருக்கிறோம்.

வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் உறுப்பினர்களின் அடுத்த கட்டப் பணிகள் குறித்து இந்தக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்களுக்குச் சொல்லப்பட்டது. தேர்தல் எப்போது வந்தாலும் சந்திக்கக் கூடிய அளவுக்கு தயாராக இருக்க வேண்டும் என்று தலைவர் அவர்கள் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள்.

எங்களது அடுத்த மிக முக்கியமான பணி என்பது சேலத்தில் நடைபெறக் கூடிய இளைஞரணி மாநில மாநாட்டை சிறப்போடும் எழுச்சியோடும் நடத்திக் காட்ட வேண்டும் என்பதாகும். மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தை தலைவர் அவர்கள் கூட்டியதன் மிக முக்கியமான நோக்கமே இதுதான்.

**உதயநிதி தலைமையில் நடைபெறும் மாநாடு!**

தி.மு.க. மாநாடு நடக்கிறது என்றால் அதனுடைய எழுச்சி என்பது தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு இருக்கும். அதிலும் குறிப்பாக இது இளைஞரணி மாநாடு. அன்புச் சகோதரர் மாண்புமிகு அமைச்சர் உதயநிதி அவர்கள் இளைஞரணிச் செயலாளராகப் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு ஏராளமான இளைஞர்கள் கழகத்தை நோக்கி ஈர்க்கப்பட்டு வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அவர் செல்லும் ஊர்களில் எல்லாம் புதிய புதிய இளைஞர்கள் கழகத்தை நோக்கி வருகிறார்கள்.

கழக அரசும் இளைஞர்களுக்கு ஏராளமான திட்டங்களைத் தீட்டி வருகிறது. இதுவும் இளைஞர்களைத் தி.மு.க. நோக்கி வர வைக்கிறது. இந்த இளைய பட்டாளத்தைக் கட்டுக் கோப்பாகவும் நம்முடைய திராவிடக் கொள்கை கொண்டவர்களாகவும் ஆக்குவதற்காகத்தான் இளைஞரணி மாநாட்டை நடத்த வேண்டும் என்று தலைவர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இன்றைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் - அன்றைய இளைஞரணிச் செயலாளராக இருந்தபோது 2007ஆம் ஆண்டு இளைஞரணியின் முதல் மாநில மாநாடு திருநெல்வேலியில் நடைபெற்றது. இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு சேலத்தில் வருகிற டிசம்பர் 17ஆம் தேதி நடைபெறுகிறது. இது ஒருநாள் மாநாடாக இது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இளைஞரணிச் செயலாளர் உதயநிதி அவர்கள் தலைமையில் இந்த மாநாடு நடைபெறுகிறது. மாநாட்டின் ஒருங்கிணைப்பாளராக இருந்து நான் பல்வேறு பணிகளை ஆற்றி வருகிறேன்.

காலை 9 மணி அளவில் கழகத்தின் இருவண்ணக் கொடியை மகளிரணிச் செயலாளர் - திருமதி. கனிமொழி எம்.பி. அவர்கள் ஏற்றி வைக்கிறார்கள். மாணவரணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் மாநாட்டைத் திறந்து வைக்க உள்ளார்கள். முக்கியப் பேச்சாளர்கள் பல்வேறு தலைப்புகளில் உரையாற்றுகிறார்கள். தலைவர் அவர்கள் மாலை 6 மணிக்கு சிறப்புரை ஆற்றுகிறார்கள்.



இந்த இளைஞரணி மாநாடு கழக வரலாற்றில் மட்டுமல்ல தமிழ்நாடு வரலாற்றிலும் இந்திய வரலாற்றிலும் முக்கியமான மாநாடாக அமையப் போகிறது. அடுத்து வர இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்குச் சேலம் மாநாடு அடித்தளம் அமைக்கும் மாநாடாக அமையப் போகிறது.

கிட்டத்தட்ட 5 லட்சம் கழகத் தோழர்கள் - இளைஞரணித் தோழர்கள் வருவார்கள் என்று அதற்கான ஏற்பாடுகளை செய்திருக்கிறோம். இவர்களுக்கு எழுச்சியும் உணர்ச்சியும் ஊட்டும் மாநாடாக இது அமையப் போகிறது.

அனைவரையும் மாநாட்டுக்கு வாருங்கள் என்று அழைப்பதைப் போல ஊடகங்களைச் சேர்ந்த உங்களையும் அழைக்கிறேன்.

**கேள்வி:** இந்த மாநாட்டிற்கு ஏதேனும் தீம் இருக்கிறதா?

**மாநாட்டின் நிறைவில் கழகத் தலைவர் உரை!**

**பதில்:** பல தலைவர்கள் பல்வேறு தலைப்புகளில் உரையாற்ற இருக்கிறார்கள். அப்போது அது சொல்லப்படும். திரும்ப வரும் போது என்னென்ன தலைப்புகளில் யார் யார் உரையாற்ற இருக்கிறார்கள் என்பது சொல்லப்படும். எழிலரசன் மாநாட்டைத் திறந்து வைக்கிறார். திருமதி கனிமொழி கருணாநிதி கொடி ஏற்றி வைக்கிறார். நான் ஒருங்கிணைப்பாளராக இருந்து பணி ஆற்றுகிறேன். காலை கொடி ஏற்றுவார்கள். 9 மணிக்கு மாநாட்டைத் திறந்து வைப்பார்கள். கழகத் தலைவர் 6 மணிக்கு உரையாற்றுவார்கள். நம்முடைய உதயநிதி அவர்கள் தலைமை ஏற்பார்கள். இதுதான் செய்தி.

**கேள்வி:** நாடாளுமன்றத் தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பு இந்த மாநாடு. தேர்தலுக்கு இது எந்த அளவிற்கு இது பயனுள்ளதாக இருக்கும்?

**பதில்:** தேர்தலுக்கு இது ஒரு முன்னோட்டமாக இருக்கும்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

